<u>மாவட்ட நீதிமன்றம், உதகமண்டலம்</u>

C.O.S. No. 1 of 2023

பெயர் : சுப்பிரமணியம்

<u>24.3.2025</u>

**<u>வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

Exhibit A4 ஒப்பந்தத்தை நானும், பிரதிவாதியும் தனிப்பட்ட முறையில் போட்டுள்ளோம் என்று சொன்னால், ஆமாம், இரண்டு பேரும் சேர்ந்து போட்டுள்ளோம். Exhibit A4 ஒப்பந்தம் என் பெயரில் போடப்பட்டுள்ளது என்று சொன்னால், ஆமாம். இவ்வழக்கை நான் தனிப்பட்ட முறையில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், ஆமாம். நான் தாக்கல் செய்துள்ள பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு, ஆடிட்டர் சான்றிதழ் மற்றும் வழக்குரையில் உள்ள வாதுரைகள் படி பிரதிவாதி எனக்கு எந்த தொகையும் தனிப்பட்ட முறையில் செலுத்த வேண்டிய அவசியமில்லை என்று சொன்னால், சரியில்லை. நான் தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கை திருத்தாமல் தொடர முடியாது என்று சொன்னால், தொடர முடியும். நான் பிராதில் 3 ம் பக்கத்தில் 8 வது பத்தியில் 45 நாட்கள் Commitment முடிந்த பிறகு என்று சொல்லியுள்ளேன், அந்த Commitment என்ன என்று சொல்ல முடியுமா என்று கேட்டால், பிரதிவாதி ரூபாய் 58,00,000/– அந்த 45 நாட்களுக்குள் கொடுப்பதாக அந்த ஒப்பந்தத்தில் ஒப்புக் கொண்டுள்ளார். நான் 22.6.2022 ம் தேதி பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பினேன். நான் Exhibit A1 அறிவிப்பை பிரதிவாதிக்கு அந்த 45 நாட்கள் முடிவதற்குள் அனுப்பியுள்ளேன் என்று சொன்னால், அந்த ரூபாய் 58,00,000/– ஐ இரண்டு பகுதியாக பிரித்துவிட்டேன், ரூபாய் 40,00,000/– ஐ ஒப்பந்த தேதியிலிருந்து 10 நாட்களுக்குள்

கொடுப்பதாகவும், மீதமுள்ள 18,00,000/- ஐ 45 நாட்களுக்குள் கொடுப்பதாக பிரதிவாதி ஒப்புக் கொண்டார்.

இந்த பிரதிவாதி என்னிடம் தனிப்பட்ட முறையில் transaction எதுவும் செய்யவில்லை என்றும், அதனால் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் எனக்கு எந்த தொகையும் செலுத்த வேண்டியதில்லை என்று சொன்னால், அப்படி சொல்வது தவறாகும். நான் சத்குரு பாபாஜி எர்த் மூவர்ஸ் மற்றும் சத்குரு பாபாஜி டிரேடர்ஸ் ஆகியவற்றை ஏக உரிமையாளர் என்ற முறையில் நடத்தி வருகிறேன் என்று சொன்னால், ஆமாம், அதில் சத்குரு பாபாஜி டிரேடர்ஸ்-ஐ என் பெயரிலும், சத்குரு பாபாஜி எர்த் மூவர்ஸ்-ஐ என் மனைவி கோகிலா பெயரிலும் நடத்தி வருகிறோம். மேற்கூறிய 2 நிறுவனங்களுக்கும் நான் உரிய உரிமம் பெற்றுள்ளேன் என்று சொன்னால், ஆமாம். அந்த 2 நிறுவனங்களை நான் பதிவும் செய்துள்ளேன் என்று சொன்னால், ஆமாம். அந்த 2 நிறுவனங்கள் பெயரில் நான் GST யும், வருமான வரியும் செலுத்தி வருகிறேன் என்று சொன்னால், ஆமாம். அந்த நிறுவனங்களின் பெயரில் தான் நான் மணல், கட்டுமான பொருட்கள் வியாபாரத்தை செய்து வருகிறேன் என்று சொன்னால், ஆமாம். இந்த நிறுவனங்கள் பெயரில் தான் நான் பிரதிவாதிக்கு கட்டுமான பொருட்களை சப்ளை செய்தேன் என்று சொன்னால், ஆமாம். இந்த 2 நிறுவனங்களுடன் பிரதிவாதிக்கு ஏற்பட்ட வியாபார நடவடிக்கைகளை தவிர, தனிப்பட்ட முறையில் எனக்கும் பிரதிவாதிக்கும் எந்த வியாபார நடவடிக்கையும் இல்லை என்று சொன்னால், பிரதிவாதி அப்பர் பவானியில் ஒரு வேலையை சப் கான்ட்ராக்டர் என்ற முறையில் எடுத்து செய்து வந்தார், அதற்காக RG & Co பிரதிவாதிக்கு கட்டுமான பொருட்களை சப்ளை செய்ய சொன்னதன் பேரில் நான் பிரதிவாதிக்கு கட்டுமான பொருட்களை சப்ளை செய்தேன், அதற்காக RG & Co எனக்கு ஒரு தொகையை அனுப்பினார்கள். பிரதிவாதிக்கும் எனக்கும்

தனிப்பட்ட முறையில் எந்த வியாபார நடவடிக்கையும் இல்லை என்றும், நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால், தவறாகும். நான் இவ்வழக்கை தனிப்பட்ட முறையில் தாக்கல் செய்துள்ளதால், இவ்வழக்கு நிலைக்கத்தக்கது இல்லை என்று சொன்னால், தவறாகும். நான் 2018 ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை பிரதிவாதிக்கு ரூபாய்.3,30,76,358/- பெருமானமுள்ள கட்டுமான பொருட்களை சப்ளை செய்துள்ளேன் என்று சொன்னால், சப்ளை செய்துள்ளேன் ஆனால் தொகை எனக்கு நியாபகம் இல்லை. நான் Exhibit A3 ஆடிட்டர் சான்றில் சத்குரு பாபாஜி எர்த் மூவர்ஸ் வியாபாரம் பற்றி சொல்லியிருப்பது சரிதான் என்றும், ஆனால் சத்குரு பாபாஜி டிரேடர்ஸ் வியாபாரம் பற்றி சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால், இரண்டுக்குமே சரியான Exhibit A3 அறிக்கை தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. சத்குரு பாபாஜி டிரேடர்ஸ் ஐ பொறுத்து தவறான ஆதாயம் பெறுவதற்காக Exhibit A3 ஆடிட்டர் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியில்லை. நான் பிரதிவாதியுடன் வியாபாரம் செய்தபோது, வருட வருடம் நான் பிரதிவாதிக்கு எவ்வளவு சப்ளை செய்கிறேன், அவர் எவ்வளவு தொகை கொடுத்துள்ளார் என்பதற்கான statement ஐ பிரதிவாதிக்கு Email மூலம் அனுப்பியுள்ளேன் என்று சொன்னால், அந்த statement ஐ பிரதிவாதிக்கு நேரடியாக கொடுத்துள்ளேன், ஆனால் Email மூலம் அனுப்பினேனா என்பது நியாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படுபவை தான் நான் பிரதிவாதிக்கு கொடுத்த statement களா என்று கேட்டால், ஆமாம், ஆனால் நான் பிரதிவாதிக்கு நிறைய statement கள் கொடுத்துள்ளேன், அவை இதுதானா என்று தற்போது என்னால் சரியாக சொல்ல முடியாது. நான் பிரதிவாதிக்கு கொடுத்த statement கள் அடிப்படையில்தான் பிரதிவாதி GST செலுத்தியுள்ளார் என்று சொன்னால், ஒவ்வொரு வருடமும் பிரதிவாதிக்கு சப்ளை செய்த பொருட்கள்

அடிப்படையில்தான் அவர் GST செலுத்தியுள்ளார். பிரதிவாதி எங்கள் நிறுவனத்திடம் ரூபாய்.3,30,76,358/- க்கு வியாபார நடவடிக்கை மேற்கொண்டு, அதில் ரூபாய்.7,30,338/- தான் நிலுவை வைத்துள்ளார் என்று சொன்னால், பிரதிவாதி என்னிடம் வியாபாரம் செய்த தொகை நியாபகம் இல்லை, ஆனால் அவர் எனக்கு கொடுக்க வேண்டிய தொகை நாங்கள் இருவரும் செய்து கொண்ட ஒப்பந்த தேதி நாளன்று பாக்கித்தொகை ரூபாய்.58,00,000/- மும், அதனுடன் GST தொகையும் பிரதிவாதி பாக்கி கொடுக்க வேண்டியுள்ளது. பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு ரூபாய்.7,30,338/- தான் கொடுக்க வேண்டும் என்றும், அவர் GST தொகை எதுவும் கொடுக்க வேண்டியதில்லை என்றும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால், சரியில்லை. பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு ரூபாய்.7,30,338/- பாக்கி வைத்திருந்தார் என்றும், அதுபோக மூன்றாம் நபருக்கு பிரதிவாதி மூலம் ரூபாய்.19,14,000/- க்கு கட்டுமான பொருட்கள் சப்ளை செய்ததற்கான பாக்கி தான் இருந்தது என்று சொன்னால், முதலில் கூறும் ரூபாய்.7,30,338/- தவறாகும், மூன்றாம் நபருக்கு பொருட்களை சப்ளை செய்ததற்காக கொடுக்க வேண்டிய தொகை எனக்கு நியாபகம் இல்லை. பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு ரூபாய்.7,30,338/- பாக்கி வைத்திருந்தார் என்றும், அதுபோக மூன்றாம் நபருக்கு பிரதிவாதி மூலம் ரூபாய்.19,14,000/- க்கு கட்டுமான பொருட்கள் சப்ளை செய்ததற்கான பாக்கி தான் இருந்தது அதனால் இந்த இரண்டு தொகைகளையும் சேர்த்து பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு ரூபாய்.26,44,338/- தான் கொடுக்க வேண்டும் என்று சொன்னால், தவறாகும்.

என் பிராதில் 10 வது பத்தியில் நான் நிறைய நபர்களிடம் கடன் வாங்கி நான் பாக்கி வைத்துள்ளேன் என்று சொல்லியுள்ளது சரியா என்று கேட்டால், ஆமாம். பிராதில் 5 வது பத்தியில்

இருதரப்பு நல விரும்பிகள் வந்து பேசி எனக்கும், பிரதிவாதிக்கும் ஒரு செட்டில்மெண்ட் ஏற்பட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், அந்த நல விரும்பிகள் யார், எங்கு வைத்து எப்போது பேசப்பட்டது என்று கேட்டால், வழக்கறிஞர் திரு.அரவிந்த் அலுவலகத்தில் அவர் மூலமாக இரண்டு சாட்சி கையொப்பமிட்ட நபர்கள் முன்னிலையில் செட்டில்மெண்ட் 2022 ம் ஆண்டு மே 9ம் தேதி பேசி முடிவெடுக்கப்பட்டு ஒப்பந்தம் போடப்பட்டது. வழக்கறிஞர் திரு.அரவிந்த் அலுவலகம் எங்கு இருக்கிறது என்று கேட்டால், காந்தளில் இருக்கிறது, ஊட்டி பிக் பஜாரில் இருந்து உள்ளே செல்லும் ரோட்டில் இருக்கிறது, இடத்தின் பெயரை சரியாக சொல்ல முடியவில்லை. வழக்கறிஞர் திரு. அரவிந்த் ஊட்டியை சேர்ந்தவர் தான். வழக்கறிஞர் திரு.அரவிந்த் ஐ விசாரித்தால் எங்களுக்குள் என்ன ஒப்பந்தம் போடப்பட்டது என்பது தெரியவரும் என்று சொன்னால், ஆமாம். உண்மையில் எனக்கு நிறைய கடன் இருப்பதாலும், கடன் வாங்குவதற்காகவும் எனக்கு ஏதாவது வருமானம் வரும் என்பதை காண்பிப்பதற்காக Exhibit A4 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால், சரியில்லை. பிரதிவாதி எனக்கு நன்கு அறிமுகம் ஆனவர் என்பதால் நான் கேட்டதற்காக நான் கடன் வாங்குவதற்காக தான் Exhibit A4 ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றும், நான் கூறும் காரணங்களுக்காக ஏற்படவில்லை என்று சொன்னால், சரியில்லை. 9.5.2022 ம் தேதி இந்த ஒப்பந்தம் 2 பிரதிகளாக தயாரிக்கப்பட்டு, அவற்றை தயார் செய்வதற்காக முத்திரைத்தாள் 10AC 765218 என் பெயரில் வாங்கப்பட்டது என்றும், அதேபோல் முத்திரைத்தாள் 10AC 765217 பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்டது என்று சொன்னால், என் பெயரில் வாங்கப்பட்ட முத்திரைத்தாள் எனக்கு தெரியும், பிரதிவாதி பெயரில் வாங்கப்பட்ட முத்திரைத்தாள் எண்ணை பற்றி தெரியாது. ஒப்பந்தம் 2 பிரதிகளாக தயாரிக்கப்பட்டது உண்மைதான் என்று சொன்னால்,

உண்மைதான். ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டபோது ஒரேயொரு சாட்சி தான் இருந்தார் என்று சொன்னால், சரியில்லை, என்னுடைய ஒப்பந்தத்தில் 2 சாட்சிகள் கையொப்பம் போட்டுள்ளார்கள். ஒப்பந்தம் போட்ட தேதியில் ஒரு சாட்சிதான் ஒப்பந்தத்தில் கையொப்பம் போட்டார் என்றும், நான் 2 வது சாட்சியிடம் கையொப்பம் பெற்ற பிறகு ஒப்பந்தத்தின் ஒரு பிரதியை பிரதிவாதிக்கு தருவதாக சொன்னேன், ஆனால் அந்த பிரதியை பிரதிவாதி வாங்காமல் விட்டுவிட்டார் என்று சொன்னால், அதை பிரதிவாதி வாங்காமல் விட்டுவிட்டதைப் பற்றி எனக்கு தெரியாது. நான் பிரதிவாதிக்கு ஒப்பந்தத்தின் அசல் பிரதியை கொடுக்காமல், என்னிடம் காண்பிக்கப்படும் ஜெராக்ஸ் நகலை தான் பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்று சொன்னால், நான் பிரதிவாதிக்கு எந்த நகலையும் கொடுக்கவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்பந்தத்தின் ஜெராக்ஸ் நகலை நான் தான் பிரதிவாதிக்கு கொடுத்தேன் என்றும், அன்று ஒரு சாட்சி தான் கையொப்பம் போட்டார் என்று சொன்னால், 2 சாட்சிகளும் ஒப்பந்தத்தில் கையொப்பம் போட்டார்கள், நான் எந்த நகலையும் பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை. பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு தரவேண்டிய நிலுவைத் தொகை ரூபாய்.26,44,338/- ல் ரூபாய்.15,00,000/- ஐ எனக்கு கொடுப்பதாக சொல்லி என்னை 19.5.2022 ம் தேதி ஊட்டிக்கு வரச் சொன்னார் என்று சொன்னால், தேதி எனக்கு நியபாகம் இல்லை, ஆனால் பிரதிவாதி என்னை ஒருநாள் ஊட்டிக்கு வரச் சொன்னார், ஆனால் பணம் எதுவும் கொடுக்கவில்லை. பிரதிவாதி சொன்னதன் பேரில் நான் ஊட்டிக்கு வந்து 19.5.2022 ம் தேதி பிரதிவாதியிடமிருந்து நான் கேட்டுக் கொண்டபடி ரூபாய்.11,00,000/- ஐ பணமாகவும், ரூபாய்.4,00,000/- ஐ காசோலை மூலமாகவும் பிரதிவாதியிடமிருந்து பெற்றேன் என்று சொன்னால், தேதி சரியாக தெரியவில்லை, பிரதிவாதி ஒருநாள்

என்னை ஊட்டிக்கு வரச் சொல்லி ரூபாய்.4,00,000/– திற்கான காசோலையை கொடுத்தார், ஆனால் அந்த ரூபாய்.4,00,000/– திற்கான காசோலை ஒப்பந்தம் சம்பந்தமாக கொடுக்கப்படவில்லை, அதற்கு முன்பே பிரதிவாதிக்கு பொருட்கள் சப்ளை செய்ததற்காக கொடுக்கப்பட்டதாகும், மேலும் அன்று பிரதிவாதி எனக்கு ரொக்கமாக பணம் ரூபாய்.11,00,000/– ஐ கொடுக்கவில்லை. அந்த ஒப்பந்தத்தில் பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு கொடுக்கவேண்டிய ரூபாய்.26,44,338/– ல், ரூபாய்.15,00,000/– ஐ தான் 19.5.2022 ம் தேதி என்னிடம் ஊட்டியில் வைத்து கொடுத்து, அது அந்த ஒப்பந்தத்திலும் வரவு வைக்கப்பட்டது என்றும், ஆனால் தற்போது நான் அந்த ஒப்பந்தத்தை மறைத்துவிட்டு, இவ்வழக்கில் ஒப்பந்தத்தில் இன்னொரு பிரதியை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், அப்படி சொல்வது உண்மையில்லை. நான் தான் உண்மை சங்கதிகளை மறைத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியில்லை. பிரதிவாதி அந்த ரூபாய்.4,00,000/– திற்கான காசோலையை எதற்காக கொடுத்தார் என்று கேட்டால், எங்களுக்குள் நிறைய வியாபார நடவடிக்கைகள் நடைபெற்றன அதற்காக கொடுத்தார். நான் குறிப்பிட்டு பதில் சொல்ல முடியாமல் இருப்பதே, நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்பதை காட்டுகிறது என்று சொன்னால், சரியில்லை. எந்த ஒரு சராசரி நபரும் மற்றொருவர் ரூபாய்.1,00,00,000/– பாக்கி வைத்திருக்கும் போது, ரூபாய்.40,00,000/– ஐ தள்ளுபடி செய்து கொண்டு ஒப்பந்தம் போடமாட்டார் என்று சொன்னால், நான் ரூபாய்.40,00,000/– ஐ தள்ளுபடி செய்யவில்லை, ஒப்பந்தப்படி ரூபாய்.58,00,000/– தையும், GST தொகையையும் செலுத்த கோரியுள்ளேன். Exhibit A4 ஒப்பந்தத்தை நடைமுறைபடுத்தும் எண்ணத்தில் நானும் பிரதிவாதியும் அந்த ஒப்பந்தத்தை போடவில்லை என்று சொன்னால், தவறாகும்.

இவ்வழக்கில் பிரதிவாதி என்னிடம் சில ஆவணங்களை கேட்டு எனக்கு நோட்டீஸ் கொடுத்தபோது, அதற்காக நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரம் தான் என்னிடம் காண்பிக்கப்படும் பிரமாண பத்திரமா என்று கேட்டால், என்னிடம் காண்பிக்கப்படுவது நான் நீதிமன்றத்தில் கொடுத்த பிரமாண பத்திரம் தான். இந்த பிரமாண பத்திரத்தில் 3 வது பத்தியில் நான் 9.5.2022 ம் தேதி பிரதிவாதி பெயரில் ஒப்பந்தம் ஏதேனும் ஏற்பட்டதா என்பது எனக்கு தெரியாது என்று சொல்லியிருப்பது தவறு என்றும், ஏனென்றால் நான் அந்த ஒப்பந்தம் 2 பிரதிகளாக தயாரிக்கப்பட்டதை என் சாட்சியத்தில் ஒப்புக் கொண்டுள்ளேன் என்று சொன்னால், ஒப்பந்தம் 2 பிரதிகளாக தயாரிக்கப்பட்டது. பிரதிவாதி எனக்கு தனிப்பட்ட முறையில் எந்த தொகையும் செலுத்த வேண்டியதில்லை என்றும், பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய தொகை முழுவதையும் செலுத்தி விட்டார் என்றும், அதனால் பிரதிவாதி எங்கள் நிறுவனத்திற்கு எந்த தொகையும் செலுத்த வேண்டியதில்லை என்று சொன்னால், தவறாகும். Exhibit A4 ஒப்பந்தத்தை தயாரித்தவரை இந்த வழக்கில் விசாரித்தால் உண்மை தெரியவரும் என்றும், அவரை இந்த வழக்கில் விசாரிக்க நான் தயாராக உள்ளேனா என்று கேட்டால், விசாரிக்கலாம் ஒன்றும் பிரச்சனை இல்லை. நான் உண்மை சங்கதியை மறைத்து, நடைமுறைப்படுத்த எண்ணம் இல்லாத ஒப்பந்தத்தின் அடிப்படையில், பிரதிவாதியிடமிருந்து தவறான ஆதாயம் பெறுவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், சரியில்லை. இவ்வழக்கு காலாவதி தோஷத்தால் நிலைக்கத்தக்கது இல்லை என்று சொன்னால், சரியில்லை. அதனால் இந்த வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால், சரியில்லை.

N. MURALIDHARAN

Digitally signed by N. MURALIDHARAN
Date: 2025.03.24 16:19:59 +0530